2020 மார்ச் 20]

138—

மின்மாற்றி

***32733—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், பானையங்கல் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், பானையங்கல் ஊராட்சியில் ஏற்கெனவே இருக்கின்ற 25 KVA திறன் கொண்ட மின்மாற்றிமூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. இருந்தாலும், மின் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் 30–3–2019 அன்று முதல் 100 KVA திறன் கொண்ட மின்மாற்றியாகத் தரம் உயர்த்தப்பட்டு, இப்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். இந்த ஆண்டு பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் தடுப்பணைகளைக் கட்ட 25 கோடியே 50 இலட்சம் ரூபாய் எனது தொகுதிக்கு ஒதுக்கியிருப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதியிலிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகம் முழுவதும் தற்போது கொரோனா வைரஸால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், எப்படி கண்ணை இமைக் காக்கின்றதோ, அதைப்போல, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சீரோடும், சிறப்போடும் தமிழகத்தை, தமிழக மக்களைக் கட்டிக் காத்துக்கொண்டிருக்கிறார். எனவே, இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று, மானியக் கோரிக்கைகளை இப்பேரவையில் சமர்ப்பிக்கவிருக்கின்ற எங்கள் மாவட்டத்தின் மண்ணின் மைந்தர், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கள்ளக்குறிச்சி தொகுதி, பானையங்கல் ஊராட்சியில் 100 KVA திறன் கொண்ட மின்மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், அந்தப் பகுதியில் இருக்கின்ற மின்கடத்தியானது பல ஆண்டுகளுக்கு முன்பு பொருத்தப்பட்டது. அந்த மின்கடத்தியை மாற்றித் தந்தால் அங்கிருக்கின்ற மக்களுக்கு மின்சாரம் கிடைக்க ஏதுவாக இருக்கும். அதுமட்டுமல்ல, அங்கு single phase மின் இணைப்புதான் கொடுக்கின்றார்கள். அதையும் மாற்றி, three phase connection கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் ஏற்கெனவே இருந்த 25 KVA திறன் கொண்ட மின்மாற்றி இப்போது, 100 KVA திறன் கொண்டதாகப் பொருத்தப்பட்டதன் காரணமாகத்தான் சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அங்கு single phase connection தான் வழங்கப்படுகிறது; அதை மும்முனை மின்சாரமாக வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதுகுறித்து ஆய்வு செய்து,

2020 மார்ச் 20]

அங்கே இருக்கின்ற தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

முற்பகல் 10–15

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் 22 110 கே.வி. துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதில் கள்ளக்குறிச்சி தொகுதிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றை அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

தியாகதுருகம் துணை மின் நிலையத்திலிருந்து ரிஷிவந்தியம் பகுதிக்கு feeder மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது. தியாகதுருகம் பகுதி SS–லிருந்து மின்சாரம் வழங்கப்படுகின்ற காரணத்தால் தியாகதுருகம் பகுதிக்கு போதுமான மின்சாரம் கிடைக்கவில்லை. எனவே, தியாகதுருகம் பகுதியிலிருந்து ரிஷிவந்தியம் பகுதியைத் தனியாகப் பிரித்து, ரிஷிவந்தியம் பகுதிக்குத் தனியாக ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே பெருவரங்கூர் கிராமத்தில், தச்சூர் கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருந்தார். அதற்காக பெருவரங்கூர் கிராமத்தில், 3.57 எக்டர் பாட்டை புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டு இப்போது அரசினுடைய கோப்பு வந்திருக்கிறது. அந்த இடம் எடுத்தவுடன் உடனடியாகத் துணை மின் நிலையம் அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக ஒரு துணை மின் நிலையம் கேட்கின்றார்கள். அந்தப் பகுதியில் மின் தேவை எந்தளவிற்கு இருக்கின்றதோ, அந்தத் தேவையின் அடிப்படையில் முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. M.S.R. ராஜவர்மன் அவர்கள்.

திரு. M.S.R. ராஜவர்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளால் நான் விவசாயிகளுக்காகவே நான் என வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், குடிமராமத்து நாயகன் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர், ஜல்லிக்கட்டு நாயகன் அருமை அண்ணன் OPS அவர்களையும், தமிழகத்தினுடைய பால் வளத் துறை அமைச்சர் எங்கள் ஆருயிர் அண்ணன் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களையும் வணங்குகிறேன். சாத்தூர் நகரில் மின்வாரியத்தில் செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க தங்க மனம் கொண்ட எங்கள் அருமை அண்ணன் திரு. தங்கமணி அவர்கள் முன் வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு தேவையிருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

139—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***10359—திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—